Tsi7T

தென்காசி மாவட்டம்

இரண்டாம் பருவத் தொகுத்தறித் தேர்வு - டிசம்பர் 2025

-----

வகுப்பு 7

கால அளவு: 2.00 மணிநேரம் | தமிழ் | மதிப்பெண்கள்: 60

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.** **5×1=5**

1) கல்வியைப் போல ----- செல்வம் வேறில்லை

அ) விலையில்லாத ஆ) கேடில்லாத இ) உயர்வில்லாத ஈ) தவறில்லாத

2) 'நாடெங்கும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது ----

அ) நா+டெங்கும் ஆ) நாடு+டெங்கும் இ) நா+எங்கும் ஈ) நாடு+எங்கும்

3) வடமொழி என்று அழைக்கப்படும் மொழி -----

அ) மலையாளம் ஆ) கன்னடம் இ) சமஸ்கிருதம் ஈ) தெலுங்கு

4) போர் இல்லாத உலகில் ----- நிலவும்

அ) பதற்றம் ஆ) சாந்தம் இ) சோர்வு ஈ) வெறுப்பு

5 'எழுத்து+ஆணி' என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் -----

அ) எழுத்து ஆணி ஆ) எழுத்தாணி இ) எழுத்துதாணி ஈ) எழுதாணி

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக:** **3×1=3**

6) கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் -----

7) கல்வி இல்லாத நாடு ----- இல்லாத வீடு.

8) கலம் காரி ஓவியம் என்று அழைக்கப்படுவது -----

**இ) சொற்றொடரில் அமைத்து எழுதுக:** **2×1=2**

9) இளமைப்பருவம்

10) தேர்ந்தெடுத்து

**ஈ) பொருத்துக** **5×1=5**

11) கற்கும் முறை - செயல்

12) உயிர்க்குக் கண்கள் - காகம்

13) விழுச்செல்வம் - பிழையில்லாமல் கற்றல்

14) எண்ணித்துணிக - எண்ணும் எழுத்தும்

15) கரவா கரைந்துண்ணும் - கல்வி

**உ) ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி.** **4×2=8**

16) இந்திய நாடு எவற்றில் சிறந்து விளங்குகிறது?

17) நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?

18) மலர்கள் எப்போது தரையில் நழுவும்?

19) தாள் ஓவியங்களை எவற்றைக் கொண்டு வரைவர்?

20) நன்மை செய்வதிலும் தீமை உண்டாகும் எப்போது?

21) துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் யார்?

**ஊ) அடிமாறாமல் எழுதுக.** **4+2=6**

22) 'வைப்புழி' எனத் தொடங்கும் அழியாச்செல்வம் பாடலை எழுதுக.

23) 'இடும்பைக்கு' என்று தொடங்கும் குறளினை எழுதுக.

**எ) ஏதேனும் 3 வினாக்களுக்கு விடையளிக்க:** **3×3=9**

24) கல்விச் செல்வம் குறித்து நாலடியார் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

25) மக்கள் குறையில்லாமல் வாழ தேயிலைத் தோட்டப்பாட்டு கூறும் வழி யாது?

26) நல்ல நூலின் இயல்புகளாக நீங்கள் கருதுவன யாவை?

27) பூக்களைக் கொய்யும்போது உங்கள் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை எழுதுக.

28) கேலிச் சித்திரம் என்றால் என்ன?

**ஏ) ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி** **2×2=4**

29) இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?

30) இலக்கிய வகைச்சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

31) முதல்நிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.

**ஐ) பின்வரும் கட்டுரை வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடையளிக்க.** **2×5=10**

32) மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.

**(அல்லது)**

33) நீங்கள் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தால் வள்ளுவர் கோட்டம் திருவள்ளுவர் சிலை போன்றவற்றைப் பார்வையிட வருபவர்களுக்கு எவ்வாறு விளக்கிக் கூறுவீர்கள்?

34) உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத்தர வேண்டி பொது நூலக இயக்குநருக்குக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

35) 'எங்கள் ஊர்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

**ஒ) கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:** **4×2=8**

36) **பொருத்தமான இடங்களில் ஆல் சேர்த்து எழுதுக:**

அ) கல்லணை கரிகாலன் கட்டப்பட்டது

ஆ) அவர் களிமண்பானை வனைந்தார்

37) **'மாலை' என்னும் சொல்லின் இரு பொருளுக்கும் தொடரமைக்க:**

அ) ------

ஆ) ------

38) **இடைச்சொல் 'கு' சேர்த்து எழுதுக:**

அ) மாடு புல் கொடுத்தார்.

ஆ) செடி பாய்ந்த நீர்

39) **கலைச்சொல் எழுதுக:**

அ) Cartoon

ஆ) Child Labour

------